Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (08-01-1991) செவ்வாய்க்கிழமை ஓசை; 324

## ஆசிரியர் அத்தியாவசியலீவை எவரும் தடுக்கமுடியாது -மகாசிவம்

(யாழ்ப்பாணம்)

ஆசிரியர்கள் தமது அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் லீவு எடுப்பதை எவரும் தடுக்கமுடியாது. இந்த லீவுகளைச் சம்பளமற்ற லீவுகளாகவும் கணிக்க முடியாது. அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் லீவெடுக்கும் எந்தவொரு ஆசிரியருக்கும் ஸ்தாபனக் கோவையின்படி சம்பளமற்ற லீவுவழங்க முடியாதென்றும், இதற்கு மாறாக கல்விப் பணிப்பாளரோ அல்லது அதிபர்களோ (4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழரின் சுயநிர்ணய உரிமை என்ற பேச்சிற்கே இடமில்லை

## தாய் மரணம்

(நல்லூர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து நாட்களுக்கு முன்னர் தற்செயலாகக் கட்டுத்துவக்கு வெடித்ததில் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டிருந்த திருக்கேதீஸ்வரி என்ற 24 வயதுப் பெண்மணி நேற்று உயிரிழந்தார்.

இவர் போதனா வைத்திய சாலைக்கு அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து அவசர சிகிச்சை பிரிவிலேயே அனுமதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத் தக்கதாகும். இந்தச் சம்பவத்தில் அவரது மகனும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (85)

## தனி இராணுவப்பிரிவும் அமைக்கப் போவதில்லை பத்திரிகையாளர் ராஜதந்திரிகள் மத்தியில் ரஞ்சன்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை, தனியான இராணுவ அமைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லையென சிறிலங்கா பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜயரெட்னா வெளிநாட்டு இராஜதந்திரிகள், பத்திரிகையாளர்கள் அடங்கிய கூட்டத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை என்ற பேச்சுக்கே இடமில்லை. இதுதவிர வேறுமாற்று வழிகளில் அவர்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்படின் அதுவே ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என நேற்று கொழும்பு கிராமோதய மண்டல நிலையத்தில் சர்வதேச ராஜதந்திரிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் மத்தியில் உரையாற்றிய சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண தெரிவித்தார்.

அவர் இச்சந்திப்பில் மேலும் பேசுகையில் தமிழ் மக்கள் (4 ஆம் பக்கம் பார்க்க)

## தொடரும் யுத்த நிறுத்த மீறல்கள்

### யுத்த நிறுத்தம் அறிவித்த அன்று 8 தமிழர்களின் வீடுகள் தகர்ப்பு

(மட்டக்களப்பு)

தாம் யுத்த நிறுத்தத்தை அறிவித்துவிட்டு அன்றைய தினமே சிறிலங்கா ஆயுதப் படையினர் தமிழர்களுக்குச் சொந்தமான எட்டு வீடுகளை உடைத்ததுடன், அவ்வீடுகளின் கதவு, யன்னல்கள், நிலைகள், பெட்டி படுக்கைகள் என ஒட்டுமொத்தமாக வீட்டைத் துப்பரவாகக் காலி செய்து (4 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த தீர்வின்பின்பே கண்காணிப்புப் பற்றி முடிவு -ஹமில்டன் வணசிங்கா

(கொழும்பு)

யுத்தநிறுத்தம் தொடர்பாக இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப்பற்றி அவதானிப்பதற்கு எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் சிறிலங்காவின் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வியாழக்கிழமை சந்திக்கவுள்ளார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகரான பிரட்மன் வீரக்கோன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த முன்னேற்றம் குறித்து அவதானிப்பதற்கு வாய்ப்பை அளிக்கக் கூடிய (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### வினோத்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் பயிற்சி முகாமில் ஏற்பட்ட விபத்துச் சம்பவமொன்றில் வினோத் (பளை) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

### றீகன்

இதே சமயம் நேற்றைய தினம் நீர்வேலியைச் சேர்ந்த றீகன் என்ற போராளி இயற்கை மரணத்தைத் தழுவிக்கொண்டார். இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## ஆனையிறவில் படையினர் புலிகள் மீது தாக்குதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் காவலரணை நோக்கி இரு தடவைகள் கனோன் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை ஆறு மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமைச் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் இராணுவத்தினர் கால்களை இழந்தனர்

(யாழ்ப்பாணம்)

பலாலியில் இருந்து தொண்டமனாறு நோக்கிச் செல்ல முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் மிதிவெடிகளில் சிக்குண்டு தமது கால்களை இழந்த நிலையில் முகாம் திரும்பியுள்ளனர்.

நேற்று மாலை பலாலியில் இருந்து தொண்டமனாறு நோக்கிச் செல்ல முயன்ற சிறி (4 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம் ஏற்படுத்த இந்தியா சகலவழியிலும் உதவும் - இந்தியத் தூதுவர் ஜா

(நுவரெலியா)

தமிழீழ விடுதலைப் புலிக...

எம். ஜா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நுவரெ...

## ஆற்றைக்கடக்க முற்பட்டவர்

## ... அமைக்கப் போவதில்லை
## பத்திரிகையாளர் ராஜதந்திரிகள் மத்தியில் ரஞ்சன்

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை, தனியான இராணுவ அமைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லையென சிறிலங்கா பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜயரெட்னா வெளிநாட்டு இராஜதந்திரிகள், பத்திரிகையாளர்கள் அடங்கிய கூட்டத்தில் நேற்றுத் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை என்ற பேச்சுக்கே இடமில்லை. இதுதவிர வேறுமாற்று வழிகளில் அவர்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முற்படின் அதுவே ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என நேற்று கொழும்பு கிராமோதய மண்டல நிலையத்தில் சர்வதேச ராஜதந்திரிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோர் மத்தியில் உரையாற்றிய சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ண தெரிவித்தார்.

அவர் இச்சந்திப்பில் மேலும் பேசுகையில் தமிழ் மக்கள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த தீர்வின்பின்பே கண்காணிப்புப் பற்றி முடிவு
### -ஹமில்டன் வணசிங்கா

(கொழும்பு)

யுத்தநிறுத்தம் தொடர்பாக இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப்பற்றி அவதானிப்பதற்கு எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் சிறிலங்காவின் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வியாழக்கிழமை சந்திக்கவுள்ளார்.

நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த ஜனாதிபதியின் சர்வதேச ஆலோசகரான பிரட்மன் வீரக்கோன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த முன்னேற்றம் குறித்து அவதானிப்பதற்கு வாய்ப்பை அளிக்கக் கூடிய

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### வினோத்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் பயிற்சி முகாமில் ஏற்பட்ட விபத்துச் சம்பவமொன்றில் வினோத் (பனை) என்பவர் வீரமரணமடைந்துள்ளார்.

### றீகன்

இதேசமயம் நேற்றைய தினம் நீர்வேலியைச் சேர்ந்த றீகன் என்ற போராளி இயற்கை மரணத்தைத் தழுவிக்கொண்டார். இவ்விரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## சமாதானம் ஏற்படுத்த இந்தியா சகலவழியிலும் உதவும்
### -இந்தியத் தூதுவர் ஜா

(நுவரெலியா)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் சமாதானம் ஏற்படுவதற்கு இந்தியா சகல வழிகளிலும் உதவும் என்று சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நுவரெலியா சென்ற ஜா அங்குள்ள மக்களால் அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவிற்கு ராஜீய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துக!
### மத்திய அரசிடம் கருணாநிதி வேண்டுகோள்

(சென்னை)

இலங்கையில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண சிறிலங்காவின் அரசாங்கத்திற்கு ராஜீய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துமாறு இந்திய மத்திய அரசாங்கத்தை தமிழக முதல்வர் மு. கருணாநிதி கேட்டுக் கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழக பொதுக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டதன் பின் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக அரசிற்கு மத்திய அரசு
## புலிகளின் நடவடிக்கையை உன்னிப்பாகநோக்க பணிப்பு

(சென்னை)

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தை உன்னிப்பாகக் கவனிக்குமாறு மத்திய அரசு மாநில அரசுக்குப் பணித்துள்ளது.

இதேவேளை தமிழ்நாட்டுக் கடற்கரையோரங்களில் கடற்படையின் ரோந்து நடவடிக்கைகளைத்தான் தீவிரப்படுத்தியுள்ளதாகவும், விசேடமாக விடுதலைப்புலிகளின் ஊடுருவலைக் கட்டுப்படுத்தவே இந்த ரோந்து நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளதாக அட்மிரல் ராம்தாஸ் தெரிவித்தார்.

## அகதிகள் சென்ற படகு மீது பீரங்கித் தாக்குதல்;
### ஆறு அகதிகள் கைது

(மாதகல்)

மாதகல் கடல் பிராந்தியத்தில் அகதிகளை ஏற்றிக் கொண்டு இந்தியா நோக்கிச் சென்று கொண்டிருந்த படகு ஒன்றின் மீது சிறிலங்கா கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் நடத்தி ஆறு பேரைக் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 7.30 மணியளவில் மாதகலில் இருந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு பேரும் படகு ஓட்டிகள் இரண்டு பேருமாக மொத்தம் எட்டுப் பேர் படகு ஒன்றில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் தமிழ் இளைஞர் 82 பேர் கைது!

(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெற்று வரும் குண்டு வீச்சுகளுக்கும் இராணுவத் தாக்குதல்களுக்கும் அஞ்சி பாதுகாப்புத்தேடி கொழும்பு சென்ற தமிழ் இளைஞர்கள் 82 பேர் ஒரே நாளில் கொழும்பு செட்டித் தெரு பகுதியில் வைத்துக் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பின்னர் பொலிஸ் நிலையத்தில் பதினைந்து இளைஞர்களை தடுத்துவைத்துக் கொண்டு மிகுதியானோர் விடுவிக்கப்பட்டனர்.

புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆணையாளர் பாலசிங்கம் பரீட்சையில் சித்தி

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளியிடப்பட்ட உள்ளூராட்சி நிர்வாக சேவை வகுப்பு ஒன்று பரீட்சை முடிவில் ஒரே ஒரு தமிழர் மட்டுமே சித்தியடைந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

அவர் வேறு யாருமல்ல யாழ்.மாநகரசபை ஆணையாளர். திரு.வி.பி. பாலசிங்கமே ஆவர்.

(லோ)

## தொடரும் யுத்த நிறுத்த மீறல்கள்

## யுத்தநிறுத்தம் அறிவித்த அன்று 8 தமிழர்களின் வீடுகள் தகர்ப்பு

(மட்டக்களப்பு)

தாம் யுத்த நிறுத்தத்தை அறிவித்துவிட்டு அன்றைய தினமே சிறிலங்கா ஆயுதப் படையினர் தமிழர்களுக்குச் சொந்தமான எட்டு வீடுகளை உடைத்ததுடன், அவ்வீடுகளின் கதவு, யன்னல்கள், நிலைகள், பெட்டி படுக்கைகள் என ஒட்டுமொத்தமாக வீட்டை துப்பரவாகக் காலி செய்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் படையினர் புலிகள் மீது தாக்குதல்

(ஆனையிறவு)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் காவலரணை நோக்கி இரு தடவைகள் கனோன் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை ஆறு மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமைச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் இராணுவத்தினர் கால்களை இழந்தனர்

(யாழ்ப்பாணம்)

பலாலியில் இருந்து தொண்டமனாறு நோக்கிச் செல்ல முயன்ற சிறிலங்கா இராணுவத்தினர் புலிகளின் மிதிவெடிகளில் சிக்குண்டு தமது கால்களை இழந்த நிலையில் முகாம் திரும்பியுள்ளனர்.

நேற்று மாலை பலாலியில் இருந்து தொண்டமனாறு நோக்கிச் செல்ல முயன்ற சிறி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆற்றைக்கடக்க முற்பட்டவர் நையப் புடைக்கப்பட்டார்

(மட்டக்களப்பு)

வீதியால் பயணம் செய்து கொண்டிருந்த நபரை இடைமறித்த இராணுவத்தினர் நையப் புடைத்து உடைமைகளையும் பறித்து நொண்டி நொண்டி வீடு செல்ல விட்டு பார்த்து ரசித்தனர்.

மேற்படி சம்பவம் நேற்றுக் காலை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள படுவான் கரை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் புலிகளின் காவலரண் மீது தாக்குதல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் முகாமில் இருந்து வெளியேறி விடுதலைப் புலிகளின் காவலரணை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

நேற்றைய தினம் ஊர்காவற்றுறை இராணுவமுகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாவிட்டபுரத்தில் புலிகள்மீது தாக்குதல்; 2 போராளிகள்காயம்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் காவல் அரண் ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் இரு போராளிகள் படுகாயமடைந்துள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாடுமேய்த்தவர் இராணுவ துப்பாக்கிச் சூட்டிற்குப் பலி

(மட்டக்களப்பு)

பாலையடிவெட்டையில் மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர் அவ்வழியாக வந்த இராணுவத்தினரின் துப்பாக்கி வேட்டில் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் பி.ப. 4 மணியளவில் பாலையடிவெட்டையிலுள்ள முகாமைச் சேர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### ஆங்கில வகுப்புகள்

கொழும்பு, வத்தளை, குருநாகல், மட்டுநகர், பிரபல ஆசிரியர் மேரி ஆனந்தன் மூன்று பாடநெறிகளை உடன் ஆரம்பிக்கிறார் By-pass To Mastery of English PART II, Spoken English with Lingual Training, G-C-E வினா விடை வகுப்புக்கள். ஞான பண்டித வைத்தியசாலை குளப்பிட்டி சந்தி, கொக்குவில். (R/1008)

### வெளிவந்து விட்டது

வர்த்தகமும் நிதியும் உயர்தர வகுப்புக்களுக்குரியது உள் நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், சந்தைப் படுத்தல் ஆகியவற்றுடன் வெளிவந்து விட்டது. தொகுப்பு: தேவராஜன் ஜெயராசன் B Com Hons) விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (B 1804)

### தவறி விட்டது

வேலாயுதம் இராசம்மா என்பவருடைய உணவு முத்திரையும், பங்கீட்டு அட்டையும், அத்துடன் தபால் கந்தோரில் பணம் பெறும் அட்டையும் சுன்னாகத்தில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்தில் (கிளை 23) ஒப்படைக்கவும். சன்மானம் உண்டு. (R/1009)

### தவறி விட்டது

வெள்ளையன் சதாசிவம் ஆகிய எனது அடையாள அட்டை இல. 582801967 X கோதீவுக்கும் நாவற்குழிக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். V. சதாசிவம், No. 31 B நவீன சந்தை, வரப்பிரசாதம் டெக்ஸ், சுன்னாகம். சன்மானம் உண்டு. (R/1015)

## வைத்திய நிபுணர்கள் ஆலோசனை

மீண்டும் சம்பந்தன் வைத்தியசாலையில் (சாந்தி தியேட்டர் அருகே) வைத்திய நிபுணர்களின் ஆலோசனை, வைத்திய சேவையை பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

(யாழ் - ஆஸ்பத்திரி OPD. பூபாலசிங்கம் புத்தகசாலை முன்பாக, சாந்தி தியேட்டர் அருகே)

**சம்பந்தன் வைத்திய நிலையம்**

22, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். ((R/999)

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.)

**92** பிரிவு: 2
**SAT-SUN CLASSES**
ஆரம்பம்: 12 1.91 (2.15)

பொருளியல்- திரு. கலாகரன்
வர்த்தகம்- பிரபல விரிவுரையாளர்
கணக்கியல்- திரு. வன்னியசிங்கம்
அளவையியல்- திரு. சுப்பிரமணியம்
தமிழ்- திரு. குழந்தை
இந்துநாகரிகம் / இந்து சமயம் ] திரு காரை சுந்தரம்பிள்ளை
புவியியல்- திரு. குணராசா

## PHYSICS

திரு. கலாமணி B. Sc. (Hons), Dip.in Ed.
(யாழ்ப்பாணத்தில் எமது நிறுவனத்தில் மட்டும் கற்பிப்பார்)

ஆரம்பம்: 9 - 1 - 91 புதன்
92 ஒளியியல் 3 - 4 p.m
91 புலங்கள் 4 - 5 p.m
90 துரிதவினாவிடை 5 - 6 p.m

**றேடியன்ற் கல்வி நிலையம்**
அரியாலை - யாழ்ப்பாணம்.

## தை 7 முதல்

O/L
க.பொ.த சாதாரணதரம்
பகல்/முழுநேரவகுப்பு
**யூனிவேர்சல்**
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.
(B-1797)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## இந்திய கடற்படை ரோந்து அதிகரிப்பு

பாக்குநீரிணையில் இந்தியக் கடலோர எல்லை பகுதிகளில் இந்தியக் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன என சிறிலங்கா அரசின் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் போர் நிறுத்தம் ஆரம்பமாகி உள்ள இந்த நிலையில் இந்தியக் கடற்படையினரின் ரோந்துப் பணி அதிகரித்துள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயக் கல்லூரி

### வவுனியா

இதுவரை காலமும் வவுனியாவில் இயங்கி வந்த மேற்படி கல்லூரியை தற்போதைய நிலைமையின் காரணமாக கிளிநொச்சிக்குத்தற்காலிகமாக இடமாற்றுவது சம்பந்தமாக உரிய விளக்கத்தை கொடுப்பதற்காக சகல மாணவர்களையும் 15-01-1991 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு திருநெல்வேலி விவசாயக் கல்லூரியில் நடைபெறவுள்ள கூட்டத்துக்கு தவறாது சமுகமளிக்குபடி கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்
(B-1827) க. இராசதுரை

## நினைவு கூருகிறோம்

1987 இல் வீரமரணமடைந்த
**பாபு (இ. பாலச்சந்திரன்)**
கரவெட்டி

**வின்சென்ற் (வைகுந்தவாசன்)**
பருத்தித்துறை

1988 இல் வீரமரணமடைந்த
**ரமேஸ் (இ. சுதாகரன்)**
இளவாலை

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகிறோம்.

*விடுதலை வேள்வியில்*
*விதையாகியவர்களே!*
*ஆண்டுகள் ஆயிரம்*
*கழிந்த பின்னாலும்*
*நீண்டுவரும் வரலாற்றில்*
*நிச்சயம் நிலைப்பீர்கள்!*
*எங்கள் தேச எல்லை*
*எங்கிலும் பேசும் பெயர்கள்*
*உங்களுடையதாகும்.*
*நீங்கள் நினைத்த அனைத்தும்*
*சாதிக்கப்படும் வரை*
*பயணங்கள் தொடரும்.*

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
(B. 1828)

(யாழ் - ஆஸ்பத்திரி OPD, பூ ாளசிங்கம் ; திதகச லை முனபாச, ச நதி திரேயட டர் அருகே)

## சம்பந்தன் வைத்திய நிலையம்

22, இராமையாச் செட்டியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். ((R/999)

## விக்னா டியூசன் சென்ரர்

52, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.
(கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.)

**92** ...ரிவு: 2
**SAT-SUN CLASSES**
ஆரம்பம்: 12 1.91 (2.15)

பொருளியல்- திரு. கலாகரன்
வர்த்தகம்- பிரபல விரிவுரையாளர்
கணக்கியல்- திரு. வன்னியசிங்கம்
அளவையியல்- திரு. சுப்பிரமணியம்
தமிழ்- திரு. குழந்தை
இந்துநாகரிகம் / இந்து சமயம் ] திரு காரை சுந்தரம்பிள்ளை
புவியியல்- திரு. குணராசா
அரசியல்- திரு. சிலன்
வரலாறு- திருமதி கமலா குணராசா

மூ குறிப்பு: - 1. கலை, வர்த்தக வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றது.
2. அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
(B-1821)

## விக்னா டியூசன் சென்ரர்

52 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
கலை, வர்த்தக வகுப்புகள்

**DAY CLASSES [8.00–2.00]**

பொருளியல் க. கலாகரன்
90 AUG: வினா, விடைவகுப்பு பகுதி II 10மணி
91 AUG-: வங்கியியல்/தேசியவருமானம் 9 மணி

கணக்கியல் - S.K பிரபாகரன்
90 AUG-: கம்பனி முடிவுக்கணக்கு - 1மணி
91 AUG-: செம்மையாக்கங்கள் - 10மணி

வர்த்தகம் பிரபல ஆசிரியர்
90 AUG-: வினாவிடை வகுப்பு 12 மணி

மற்றும் அனைத்துப்பாடங்களும் வழமையான ஆசிரியர் குழுவினால் போதிக்கப்படுகின்றன

மூ குறிப்பு: கிழமை நாட்களில் நான்கு பாடங்களும் நடைபெறும்.
விடுதி வசதி செய்து கொடுக்கப்படும்.
(B-1820)

கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.
(B-1797)

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



கப்டன் பாறுக்
வீர மரணம்
07- 01- 1987

### வீரவேங்கை சீலன்

| அடிமை மண்ணில் | அடிமை விலங்கொடிப்பில் |
|---|---|
| 13-5-1970 | 07-01-1987 |

யாழ். கோட்டை இராணுவ முகாமில் இருந்து அழிப்பு நடவடிக்கைக்காக வெளியே புறப்பட்ட ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடிமோதலில் வீரமரணமடைந்த கப்டன் பாறூக் (ஹனிபா அக்கரைப்பற்று) வீரவேங்கை சீலன், (த.சிவ குமாரன், நாவாந்துறை) ஆகியோருக்கு எமது வீர அஞ்சலிகள். உங்கள் இலட்சியப் பணியில் என்றும் தொடரும்

வண். வடமேற்கு சிற்றூர் அவை,
J/88 புதிய சோனகத்தெரு சிற்றூர் அவை,
மாவீரர் சனசமூக நிலையம்,
புதுக்குடியிருப்பு.
B.-1826)

நினைவு கூருகிறோம்

1987 இல் வீரமரணமடைந்த
**பாபு (இ. பாலச்சந்திரன்)**
கரவெட்டி
**வின்சென்ற் (வைகுந்தவாசன்)**
பருத்தித்துறை

1988 இல் வீரமரணமடைந்த
**ரமேஸ் (இ. சுதாகரன்)**
இளவாலை
ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகிறோம்.

விடுதலை வேள்வியில்
விதையாகியவர்களே!
ஆண்டுகள் ஆயிரம்
கழிந்த பின்னாலும்
நீண்டுவரும் வரலாற்றில்
நிச்சயம் நிலைப்பீர்கள்!
எங்கள் தேச எல்லை
எங்கிலும் பேசும் பெயர்கள்
உங்களுடையதாகும்.
நீங்கள் நினைத்த அனைத்தும்
சாதிக்கப்படும் வரை
பயணங்கள் தொடரும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
(B. 1828)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17 — 05 — 1968



மறைவு
08 — 01 — 1988

### வீரவேங்கை சுதா

எங்கள் செல்வமே சுதா!

நீ எம்மை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் என்றும் எம்நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றாய். சுதா! உன் இழப்பை நாம் இன்று நினைத்தாலும் மனம் எரியுதடா! உன் ஆத்மா சாந்தியடைய என்றும் வேண்டி நிற்கும்

சிறுவிளான்,
இளவாலை.

அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
(R-1[illegible]0)

## சிந்தனைக்கு

எந்த உண்மையையும் நிலைநாட்டுவதற்கு ஆயிரம் வாதங்களைவிட, இரண்டு மூன்று சான்றுகளே சிறந்தவை.

— நத்தேனியல் எம்மன்ஸ்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 08-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# ஏமாற்றுகளை வெளிக்காட்ட சர்வதேச மத்தியஸ்தம்

சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஒரு பேச்சுவார்த்தை நிகழும் பட்சத்தில் அதற்கு சர்வதேச மத்தியஸ்தம் விரும்பத்தக்கது என விடுதலைப் புலிகளின் வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பாளரான கிருஷ்ணகுமார் (கிட்டு) தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில், இலங்கையில் தமிழர் தேசியப் பிரச்சினைக்கு இந்தியா தன்னை மத்தியஸ்தர் ஆக்கிக் கொண்டது அன்றிருந்த அரசியல் சூழ்நிலையும், இந்தியா மீது முன்பிருந்த தமிழரின் நல்லெண்ணமும் இந்தியாவின் மத்தியஸ்த முயற்சியை விரும்பியோ விரும்பாமலோ தமிழர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

ஆனால், இந்தியா தமிழர் தேசிய பிரச்சினையில் மத்தியஸ்தராக கடமையாற்றவில்லை. தனது பிரதேச நலன் பேணும் நடவடிக்கையில் மட்டுமே அக்கறை கொண்டிருந்தது. இந் நிலையானது வழக்காளியை விட்டு விட்டு எதிரியு நீதிபதியும் கூட்டுச் சேர்ந்தது போன்றது அதாவது தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழரைப் புறக்கணித்துவிட்டு இந்தியாவும், சிறிலங்காவும் ஒப்பந்தம் செய்துகொண்டன.

இதன்காரணமாக நீதிபதி எதிரியைத் தண்டிப்பதற்குப் பதில் வழக்காளிக்கு தண்டனை விதித்ததோடு, அதனை நிறைவேற்றவும் முற்பட்டார். இதன் காரணமாக பல ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். பல கோடி ரூபா சொத்துக்கள் அழிக்கப்பட்டன. மக்கள் சொல்லொண்ணாத் துயரத்தை அனுபவித்தார்கள்.

இதன் காரணமாக தமிழ் மக்கள் இந்தியா மீதிருந்த நம்பிக்கையை இழந்துள்ளார்கள் இந்தியா தமிழர் தேசிய பிரச்சினை மூலம் தனது ஆதாயத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளார்கள்.

ஆனால், இன்றும் இந்தியா தனது போக்கை மாற்றிக் கொண்டதாகவில்லை தமிழர்களின் எஜமானராகவும், தனது நலனுக்கு தமிழரின் போராட்டத்தை பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகவுமே உள்ளது.

மேலும் இந்திய மத்திய மாநில அரசாங்கங்களும், கட்சிகளும் இலங்கைத் தமிழர் பிரச்சினையை இன்று தமது நலனுக்காகப் பயன்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளமை இலங்கைத்தமிழ்மக்களுக்கு அவர்கள் மீது பெரும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் மத்தியஸ்தத்தை நினைத்துப் பார்க்க முடியாததும் ஆக்கிவிட்டுள்ளது.

அத்தோடு இந்தியாவிடம் இருந்து தமிழர் பிரச்சினை தொடர்பாக நல்ல அறிவிப்புக்கள் எவையும் வரவில்லை. இதன் காரணமாக இந்தியாவின் மத்தியஸ்தம் தமிழர் தரப்பில் விருப்பத்திற்குரியதாகவும் இல்லை.

# பொறுமையின் சிகரமான »கடமை வீரன்«

பண்டிதர்!
தாகூர்!

என்ற பெயர்களில் அழைக்கப்பட்ட கப்டன் ரவீந்திரன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினராவர். அத்துடன் தமிழீழத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நிதியமைப்புக்கும், ஆயுதப் பராமரிப்புக்கும் பொறுப்பாக இருந்தார்.

வல்வெட்டித்துறைக்கு அருகாமையிலுள்ள கம்பர்மலை என்ற கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பண்டிதருக்கு வயது 24. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முதற்களப் பலியான மறைந்த மாவீரன் லெப்டினன்ட் சங்கரின் பள்ளித்தோழனான பண்டிதர் 1977 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இயக்க வளர்ச்சிக்கு அயராது உழைத்தார். கடமையுணர்வு, கடும் உழைப்பு, இலட்சியப்பற்று ஆகிய சீரியபண்புகள் நிறைந்த பண்டிதர் விடுதலைப் போராளிகளின் அன்புக்கும் பண்புக்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மீது மதிப்பும் பாசமும் கொண்டவராக; அவரது வலது கரமாகத் திகழ்ந்தார். இயக்க நிர்வாகப் பொறுப்புகளைச் சுமந்து வந்ததோடு மட்டுமல்லாது கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளிலும் பங்குபற்றி வந்தார்.

1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் நாள் 500க்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினரால் அவர் இருந்த கிராமமே மூன்று வளையங்களாக முற்றுகையிடப்பட்ட நிலையில் வெறுமனே உயிர் தப்பி வருவதானால் சிங்கள இராணுவத்தினரின் முற்றுகை வளையங்களை உடைத்து விட்டுத் தப்பிச் சென்றிருக்க முடியும். ஆயினும் இயக்கத்தின் ஆயுதப் பொறுப்பாளரான அவர். மேலதிகமாக இருந்த இயக்கத்தின் பெறுமதிமிக்க ஆயுதங்களைவிட்டுச் செல்ல மனமின்றித் தயக்கம் காட்டினார். யாரும் எதிர்பாராத வேளையில் காட்டிக் கொடுப்பினால்ஏற்பட்ட திடீர் இராணுவ முற்றுகைஅவருக்கு வரை போராடுவது என்று முடிவெடுக்கின்றார்கள்.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத் தோழர்களுக்கும் சிங்கள இராணுவத்துக்கும் மத்தியில்



கப்டன் பண்டிதர்

பயங்கர சண்டை மூண்டது. நீண்டநேரமாக நடைபெற்ற அந்தச் சண்டையில் பண்டிதர் இறுதிவரை போராடி விடுதலை இலட்சியத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்தார்.

அவர் ஏற்றுக்கொண்ட இரு பொறுப்புக்களுமே இயக்கத்துக்கு உயிர்நாடியானவை. அந்த இரு பொறுப்புக்களையும், தனக்கு நீண்ட காலமாக இருந்து வந்த, ஆஸ்த்மா நோய்க்கு மத்தியிலும் மிகச் செவ்வனே அவர். நிர்வகித்து வந்தார் தனது நோயினால் ஏற்படும் சிரமங்களைத் தாங்கிக்கொண்டு கூடியவரை அவற்றை வெளிக்காட்டாது செயற்பட்டவர் அவர். இயக்க கடமைகளின்போது அவர் கடைப்பிடித்த சகிப்புத் தன்மையும், பொறுப்புணர்வும் அலாதியானது. அவர் தூய தமிழில், அடக்கமாகவும், பணிவுடனும் பேசும் சுபாவங் கொண்டிருந்தார். அதனாலேதான் இயக்கத் தோழர்களால் அவர் பண்டிதர் என்று அழைக்கப்பட்டார். பொறுமையின் சிகரமாகத் திகழ்ந்த அவர் எந்த இடத்திலும் அநீதியையும், அக்கிரமத்தையும் கண்டால் சீறி எழுவார்.

பண்டிதருடன் நான்கு இளம் புலிகள் வீரமரணமடைந்தனர். பக்கத்தில் இன்னுமொரு இடத்தில் முற்றுகைக்குட்பட்ட பத்து இயக்க வீரர்கள் முற்றுகையை உடைத்துக்கொண்டு தப்பிச் சென்றனர்.

தன் விடுதலை உணர்வுகளுக்கு ஒத்திசைவளிக்க மறுதலிக்கும் ஆஸ்த்மா வியாதியின் அகோரத்தையோ அல்லது வறுமையை அனுபவிக்கும் குடும்பப் பின்னணியையோ எப்பரிமாணத்திலும் பண்டிதர் முதன்மைப் படுத்தியதில்லை. தன் இறுதியின் விடிவுக்கு தன் ஆளுமையையும், ஆற்றலையும் அளித்த தோழர் பண்டிதர் என்றுமே எளிமையை நேசித்தவராகவும், இயக்கப் போராளிகள் மீது தீவிர பற்றுள்ளவராகவும் தான்சார்ந்த அமைப்புக்கு என்றும் நேர்மையும், விசுவாசமும் மிக்க உறுப்பினராகவும் இருந்தது மட்டுமன்றி அவற்றை அனுபவரீதியில், நிதர்சனப்படுத்தியுமிருக்கிறார்.

சிங்கள இராணுவம் முற்றுகையிட்ட அக்கணத்திற்கூட சுயபாதுகாப்பைக் கருத்திற் கொள்ளாது அந்நகத்திலிருந்து இரு இளம் சிறார்களையும், ஒரு வயோதிபத்தாயுட்பட பெண் சகோதரி ஒருவரையும் பாதுகாப்பாக அப்புறப் படுத்தினார். அதேபோல பத்துவிடுதலைப்புலி இயக்கத் தோழர்கள் முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளிவந்தமைக்கும் பொறுப்புமிக்க தீரத்துடன் இறுதிவரை பண்டிதர் போராடியமையே காரணமாகும். ஆனால்இன்று அத்தகைய ஒரு வீரப்போராளி நம் மத்தியிலில்லை. அவன் பணிகளே எம்முடன் ஜீவிக்கின்றன.

கப்டன் பண்டிதர் எனப்படும்
ரவீந்திரன் வீரமரணமடைந்த
ஆறாவது நினைவு தினம் நாளையாகும்.
அதனைக் குறிக்கும் முகமாக இந்தக்
கட்டுரை பிரசுரமாகின்றது.

# கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறி ஆரம்பம்

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவு (மேற்பார்வை மட்டம்) பயிற்சிநெறி யாழ்ப்பாணக் கூட்டுறவுக்கல்லூரியில் இம்மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சி ஆறுமாத காலத்தில் பூர்த்தியாக்கப்படும். இப்பயிற்சிக்கு க. பொ. த. சாதாரண தரத்தில் ஆறு பாடங்கள் சித்தியெய்தி கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்

மத்தியஸ்தராக கடமையாற்றவில்லை. தனது பிரதேச நலன் பேணும் நடவடிக்கையில் மட்டுமே அக்கறை கொண்டிருந்தது. இந் நிலையானது வழக்காளியை விட்டு விட்டு எதிரியுடன் நீதிபதியும் கூட்டுச் சேர்ந்தது போன்றது அதாவது தமிழர் பிரச்சினை தொடர்பாக தமிழரைப் புறக்கணித்துவிட்டு இந்தியாவும், சிறிலங்காவும் ஒப்பந்தம் செய்துகொண்டன.

இதன்காரணமாக நீதிபதி எதிரியைத் தண்டிப்பதற்குப் பதில் வழக்காளிக்கு தண்டனை விதித்ததோடு, அதனை நிறைவேற்றவும் முற்பட்டார். இதன் காரணமாக பல ஆயிரம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். பல கோடி ரூபா சொத்துக்கள் அழிக்கப்பட்டன. மக்கள் சொல்லொண்ணாத் துயரத்தை அனுபவித்தார்கள்.

இதன் காரணமாக தமிழ் மக்கள் இந்தியா மீதிருந்த நம்பிக்கையை இழந்துள்ளார்கள் இந்தியா தமிழர் தேசிய பிரச்சினை மூலம் தனது ஆதாயத்தையே நோக்கமாகக் கொண்டுள்ளதை மக்கள் தெளிவாகப் புரிந்து கொண்டுள்ளார்கள்.

ஆனால், இன்றும் இந்தியா தனது போக்கை மாற்றிக் கொண்டதாகவில்லை தமிழர்களின் எஜமானராகவும், தனது நலனுக்கு தமிழரின் போராட்டத்தை பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகவுமே உள்ளது.

மேலும் இந்திய மத்திய மாநில அரசாங்கங்களும், கட்சிகளும் இலங்கைத் தமிழர் பிரச்சினையை இன்று தமது நலனுக்காகப் பயன்படுத்துவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளமை இலங்கைத்தமிழ்மக்களுக்கு அவர்கள் மீது பெரும் வெறுப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர்களின் மத்தியஸ்தத்தை நினைத்துப் பார்க்க முடியாததும் ஆக்கிவிட்டுள்ளது.

அத்தோடு இந்தியாவிடம் இருந்து தமிழர் பிரச்சினை தொடர்பாக நல்ல அறிவிப்புக்கள் எவையும் வரவில்லை. இதன் காரணமாக இந்தியாவின் மத்தியஸ்தம் தமிழர் தரப்பில் விருப்பத்திற்குரியதாகவும் இல்லை.

கடந்தகாலத்தில் இந்தியாவின் தலையீட்டால் இலங்கையில் தமிழர் மீதுஇழைக்கப்படும் இனப்படுகொலைகளும், சிறிலங்காவின் ஏமாற்று நடவடிக்கைகளும் சர்வதேச சமூகத்திடம் மறைக்கப்பட்டுக்கொண்டே வந்துள்ளன. இதனால் சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப்புலிகள் மீது சர்வதேச ரீதியாக வைக்கும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவையாக இருந்தும் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டன இதனால் தமிழர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாக வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

இந்த நிலையில், சர்வதேச மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தை நடைபெறுவது பலராலும் வரவேற்கத் தக்கதொன்றாகும் இதன் காரணமாக கடந்தகாலத்தில் சிறிலங்கா அரசாங்கம் தான் விரும்பியது போன்று ஏமாற்றுக்களையும் பிரசாரங்களையும் செய்யமுடியாது போவதோடு, வெளியாரின்வற்புறுத்தலினால்ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சாட்டவும் முடியாது.

# இறந்த ஆயுதப்படையினர் குடும்பத்திற்கு வேலைவாய்ப்பு

(கொழும்பு)

யுத்த நடவடிக்கைகளில் இறந்த ஆயுதப் படையினரதும், பொலிசாரினதும் பிள்ளைகள் சகோதரர்களுக்கு பாதுகாப்பு அபய சேவை மன்று தொழில் வாய்ப்புகளை வழங்கி வருகின்றது.

இதற்காக பாதுகாப்பு அபய சேவை மன்றிற்கு பல உதவிகள் கிடைத்து வருகின்றன. இறந்தபடையினரின் நெருங்கிய உறவினர்களுக்கு இதுவரை நூற்றியிருபது தொழில்வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சித்திரை மாதமளவில் தந்தை அற்ற ஐந்நூறு பிள்ளைகளுக்கு தொழில் வாய்ப்பு வழங்கப்படும் எனவும் ஏனையோருக்கு இலவச தொழிற்பயிற்சி வழங்கப்பட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உழைப்பு, இலட்சியப்பற்று ஆகிய சீரியபண்புகள் நிறைந்த பண்டிதர் விடுதலைப் போராளிகளின் அன்புக்கும் பண்புக்கும் பாத்திரமாக விளங்கினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மீது மதிப்பும் பாசமும் கொண்டவராக; அவரது வலது கரமாகத் திகழ்ந்தார். இயக்க நிர்வாகப் பொறுப்புகளைச் சுமந்து வந்ததோடு மட்டுமல்லாது கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளிலும் பங்குபற்றி வந்தார்.

1985ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் நாள் 500க்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினரால் அவர் இருந்த கிராமமே மூன்று வளையங்களாக முற்றுகையிடப்பட்ட நிலையில் வெறுமனே உயிர் தப்பி வருவதானால் சிங்கள இராணுவத்தினரின் முற்றுகை வளையங்களை உடைத்து விட்டுத் தப்பிச் சென்றிருக்க முடியும். ஆயினும் இயக்கத்தின் ஆயுதப் பொறுப்பாளரான அவர். மேலதிகமாக இருந்த இயக்கத்தின் பெறுமதிமிக்க ஆயுதங்களைவிட்டுச் செல்ல மனமின்றித் தயக்கம் காட்டினார். யாரும் எதிர்பாராத வேளையில் காட்டிக் கொடுப்பினால்ஏற்பட்ட திடீர் இராணுவ முற்றுகைஅவருக்கு அதிர்ச்சியைக் கொடுக்கிறது. தமிழீழத்தில் நிதி, ஆயுதங்களுக்குப் பொறுப்பாக இருந்த தனக்கு ஒரு தார்மீகப் பொறுப்பு கூட இருக்கிறது என்பதைச் சிங்கள இராணுவம் முற்றுகையிட்ட அந்த கணத்திற்கூட உணர்ந்து அவரும், அவருடன் கூட இருந்த தோழர்களும் இறுதிவரை போராடி விடுதலை இலட்சியத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்தார்.

அவர் ஏற்றுக்கொண்ட இரு பொறுப்புக்களுமே இயக்கத்துக்கு உயிர்நாடியானவை. அந்த இரு பொறுப்புக்களையும், தனக்கு நீண்ட காலமாக இருந்து வந்த ஆஸ்த்மா நோய்க்கு மத்தியிலும் மிகச் செவ்வனே அவர் நிர்வகித்து வந்தார். தனது நோயினால் ஏற்படும் சிரமங்களைத் தாங்கிக்கொண்டு கூடியவரை அவற்றை வெளிக்காட்டாது செயற்பட்டவர் அவர். இயக்க கடமைகளின்போது அவர் கடைப்பிடித்த சகிப்புத் தன்மையும், பொறுப்புணர்வும் அலாதியானது. அவர் தூய தமிழில், அடக்கமாகவும், பணிவுடனும் பேசும் சுபா விசுவாசமும் மிக்க உறுப்பினராகவும் இருந்தது மட்டுமன்றி அவற்றை அனுபவரீதியில் நிதர்சனப்படுத்தியுமிருக்கிறார்.

சிங்கள இராணுவம் முற்றுகையிட்ட அக்கணத்திற்கூட சுயபாதுகாப்பைக் கருத்திற் கொள்ளாது அத்தருணத்திலிருந்து இரு இளம் தோழர்களையும், ஒரு வயோதிபத்தாயுட்பட பெண் சகோதரி ஒருவரையும் பாதுகாப்பாக அப்புறப்படுத்தினார். அதேபோல பத்துவிடுதலைப்புலி இயக்கத் தோழர்கள் முற்றுகையை உடைத்துக் கொண்டு வெளிவந்தமைக்கும் பொறுப்புமிக்க தீரத்துடன் இறுதிவரை பண்டிதர் போராடியமையே காரணமாகும். ஆனால்இன்று அத்தகைய ஒரு வீரப்போராளி நம் மத்தியில் இல்லை. அவன் பணிகளே எம்முடன் ஜீவிக்கின்றன.

# கூட்டுறவுப் பணியாளர் பயிற்சிநெறி ஆரம்பம்

கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர சாதாரண பிரிவு (மேற்பார்வை மட்டம்) பயிற்சிநெறி யாழ்ப்பாணக் கூட்டுறவுக்கல்லூரியில் இம்மாதம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இப்பயிற்சி ஆறுமாத காலத்தில் பூர்த்தியாக்கப்படும். இப்பயிற்சிக்கு க.பொ.த. சாதாரண தரத்தில் ஆறு பாடங்கள் சித்திபெற்று கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றுவோர் அல்லது கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட பிரிவு பரீட்சையில் சித்தியடைந்து 3வருடங்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுவோர், அல்லது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை இராம்பியடி லேனில் அமைந்துள்ள கூட்டுறவுச் சபை அலுவலகத்தில் பெற்று செயலாளர், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை, இல: 15 இராம்பியடி லேன், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு இம்மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கும்படி மேற்படி சபையின் செயலாளர் திரு.சு. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

## குழந்தைகளுக்கான தடுப்பூசி

தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயப் பகுதியில் வைத்து இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு குழந்தைகளுக்கான தடுப்பூசியும் திரிபோசா மாவும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ‘பாயும் புலிகள் பணிவரோ?’

ஆயுதத்தை உன் கையில்
அளித்து விட்டுப் பேசவர
மேயும் மாடுகளா நாமிங்கே?
மேன்மைத் தலைவரைக் கொண்டுள்ள
பாயும் புலிகள் பணிவரோ? பார்த்திரு!
நாயல்ல நாம்; நயந்துன்னைக் கேட்பதற்கு
தோயும் குருதியிலே மிதந்தாலும் இனமானம்
தேயாது; எம்முள்ளம்...தெரிந்துகொள்!

வீர இளைஞன் வீறுடன் நிற்கின்றான்...உன்
நாறும் பற்களைப் பெயர்த்திட...
“போர் என்றால் போர்” புரிந்திடு – இன்றேல்
பணிந்திடு...பேச்சுக்கள் தொடர்ந்திடு!
சீர்பெற்று வாழ்ந்த தமிழினம் – மீண்டும்
பேர்பெற்று ஆள எழுந்திடும் – உன்
கோர வெறியெல்லாம் அடங்கிடும்....
பாரில் புலிக்கொடி பறந்திடும்...தெரிந்திடு!

—மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயம் தற்போதுயாழ். ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்தில் நண்பகல் 12-30 முதல் மாலை 4-30 மணிவரை நடைபெறுகிறது என மேற்படி வித்தியாலய அதிபர் அறிவித்துள்ளார்.

ஈராக் இராணுவத்திடம் சதாம் ஹுசைன்

# பலஸ்தீனத்தை விடுவிக்க தயாராக இருக்கும்படி வேண்டுகோள்

(பாக்தாத்)

பாலஸ்தீனத்தை விடுவிக்கத் தயாராக இருக்கும்படி ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் தமது இராணுவத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஈராக்கிய இராணுவத்தின் 70 ஆவது இராணுவ தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள அறிக்கையில் சதாம் ஹுசைன் இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

சதாம் ஹுசைனின் இந்த இராணுவச் செய்தியானது போர் ஒன்றிற்கான அறிவிப்பே என்று இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் டேவிட் லெவி தெரிவித்துள்ளார். அத்துடன் ஈராக்கிற்கு எதிராக இஸ்ரேல் விரைந்து பதில் தாக்குதல் நடாத்தும் என்றும், ஈராக் ஒரு முறை தாக்கினால் இஸ்ரேல் இரண்டு பங்கு எதிர்ப்பாகத் தாக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் நாளை ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையே ஈராக்கிற்கு வழங்கப்படவிருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் என எச்சரித்துள்ளார்.

லண்டன் சென்றுள்ள ஜேம்ஸ் பேகர் அமெரிக்க நேச நாடுகளுடன் வளைகுடாப் பிரச்சினை குறித்து இறுதிப்பேச்சுக்கள் நடாத்தவுள்ளார். லண்டனில் இவர் பேசும்போது நேசநாடுகளில் பல போரையே விரும்புகிறது எனத் தெரிவித்தார். அத்துடன் எந்தக் காரணத்தை முன்னிட்டும் குவைத்தை விட்டு ஈராக் வெளியேறாவிடில் சதாம் ஹுசைனுடன் பேச்சுக்கள் நடாத்தப்படமாட்டாது எனத் தெரிவித்தார்.

பிரித்தானியப் பிரதமர் ஜோன் மேயர் சவுதி அரேபியாவில் உள்ள தமது படைகளை சந்திக்க அங்கு சென்றுள்ளார். அங்கு சவுதி அரேபிய மன்னரைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடாத்தினார்.

## போருக்கான நடவடிக்கையில் பிரிட்டன் அரசாங்கம் தீவிரம்

(லண்டன்)

ஈராக்கின் யுத்தப்பிரகடனத்தை தொடர்ந்து எந்நேரமும் போர் மூளலாம் என்று பிரிட்டன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. யுத்தத்தில் காயப்படுபவர்களுக்கு மருத்துவ வசதிகளை வழங்கும் வகையில் பொதுக்கட்டடங்களையும், பள்ளிக்கூடங்களையும் இங்கிலாந்து தயார் நிலையில் வைத்துள்ளது. மேலும் இரத்ததானம் செய்வதற்கான ஒழுங்குகளையும் இங்கிலாந்து அரசாங்கம் கவனித்து வருகிறது.

## பிரிட்டனில் தொழிற்கட்சி வளைகுடாப் போருக்கு எதிர்ப்பு

(லண்டன்)

வளைகுடாவில் போர் ஒன்றை நடத்துவதற்கு பிரிட்டனில் எதிர்ப்புகள் தோன்றியுள்ளன. ஆரம்பத்தில் வளைகுடாவில் பிரிட்டனின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து வந்த தொழிற் கட்சியினர் தற்பொழுது எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். ஈராக்கிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத்தடை அதன் பலனைத்தர வழங்கப்பட்ட கால அவகாசம் போதாது என்றும், கால அவகாசத்தை நீடித்துப் போரைப் பின்போடுமாறும் தொழில் கட்சியின் நிழல் அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொழில் கட்சியின் இக்கோரிக்கைக்கு கன்சவேட்டிவ் கட்சியைச் சேர்ந்த சிலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். தொழில் கட்சியினர் போருக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க இவ் வாரத்தில் லண்டனில் பேரணி ஒன்றையும் நடத்தவுள்ளனர்.

## இராணுவம் கைது செய்தவரை காணவில்லை

(நமது நிருபர்)

கொழும்பிற்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் (கந்தையா பாலச்சந்திரன் 29) திரும்பி வரும் வழியில் வவுனியாவில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டதாகவும், தற்பொழுது அவர் பற்றிய தகவல் ஏதும் இல்லை எனவும் தெரிய வருகின்றது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் பதின்மூன்றாம் திகதி கொழும்பு சென்ற இவர் செப்டம்பர் மாதம் பத்தாம் திகதி திரும்பி வரும் வழியில் வவுனியாவில் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது பற்றிய தகவல் அறிந்த குடும்பத்தினர் தேடும் முயற்சியில் பல முறை வவுனியா சென்று முயற்சித்தபோதும் பலன் எதுவும் கிட்டவில்லை. கைது செய்யப்பட்டவர் இரு பிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆங்கிலப் பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் உயர் தொழில் ஆங்கில கற்கை நெறிக்கான பரீட்சைகள் இம்மாதம் பன்னிரெண்டாம் பதின்மூன்றாம் திகதிகளில் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணத்தில் கற்கை நெறியினை மேற்கொண்டிருக்கும் மாணவர்களுக்கான பரீட்சைகள் யாழ். பிராந்திய நிலையத்திலேயே நடைபெறவுள்ளன. (20)

**போர்**

தாக இந்தச் சந்திப்பு இருக்கும் என்பதாலேயே தாம் இந்தக் கூட்டத்தினைக் கூட்ட விரும்பியதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்காவின் இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா கருத்துத் தெரிவிக்கையில் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கும் விதம் குறித்து அவதானிக்கப்பட்டு வருகிறது என்றும், இது தொடர்பாக தீர்வு ஒன்று எடுக்கப்படும் வரை போர் நிறுத்தத்தை கண்காணிப்பது என்பது பற்றி முடிவு எடுக்க இயலாது என்றும் தெரிவித்தார்.

**கொழும்பில்**

பட்டுள்ள பதினைந்து இளைஞர்களும் புலனாய்வுத்துறையினரின் தீவிரவிசாரணைக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

**சமாதானம்**

இந்தியாவை மத்தியஸ்தம் வகிக்க அழைத்தால் அல்லது பேச்சுவார்த்தைக்காக தொ

யாழ். மாவட்டத்திற்கான

## புனரமைப்பு அபிவிருத்திபற்றிய நிகழ்ச்சித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான 1991 ஆம் ஆண்டிற்குரிய அபிவிருத்தி, புனரமைப்பு, பராமரிப்பு, சேவைகள் போன்றவற்றிற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட உள்ளது.

இதற்கான திட்ட அமுலாக்கல் செயற்பாடு பற்றிய அறிக்கை ஒன்று யாழ் மாவட்டத்தின் சகல திணைக்களத்தலைவர்களுக்கும், உதவி அரசாங்க அதிபர்களுக்கும் கூட்டுத்தாபனங்கள், சபைகள் போன்றவற்றின் முகாமையாளர்களுக்கும், தொழில் நுட்பக் கல்லூரி, திறந்த பல்கலைக்கழகம் போன்றவற்றின் அதிபர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது.

இவர்கள் ஒவ்வொருவரும் தாம் இவ்வாண்டு மேற்கொள்ள இருக்கும் செயற்திட்டம் பற்றியும் நிதியைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் பற்றியும் எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் படி மேலதிக அரசாங்க அதிபர் வேண்டுகோள்விடுத்துள்ளார் (க)

**ஊர்காவற்றுறை**

வத்தினர் அங்கிருந்து வெளியேறி கரம்பொன் பகுதியிலுள்ள விடுதலைப் புலிகளின் காவலரணுக்கு அருகே வந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டு முகாம் திரும்பியுள்ளனர்.

எனினும் போர் நிறுத்த ஒழுங்கை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்ததால் எவ்வித எதிர்த் தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை. (மு)

**மாவிட்டபுரத்தில்**

நேற்று நண்பகல் 12 மணியளவில் புலிகளின் காவலரண் ஒன்றின்மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தும்பன், சகில் ஆகிய இரு போராளிகள் காயமடைந்துள்ளனர். (க)

**தமிழரின்**

தமது பாதுகாப்புக்காக ஒரு தனி இராணுவம் அமைத்துக் கொள்வது என்பதும் ஏற்றுக் கொள்ள முடியாது மாகாண சபை திட்டத்தின் கீழா அல்லது பிரதேசசுயாட்சி அமைப்பின் கீழா தான் நாம் பேச்சுக்களை நடாத்த தயாரானநிலையில் உள்ளோம் என்றார்.

மேலும் கடந்த முதலாம் திகதியில் இருந்து விடுதலைப் புலிகளால் தன்னிச்சையாக செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த விடயம் பற்றி அவர் குறிப்பிடுகையில் இந்த யுத்த நிறுத்தம் சர்வதேச ரீதியாக புலிகள் தமக்கு ஆதரவு தேடிக்கொள்வதற்கும், ஆட்களைத் திரட்டுவதற்கும் செய்து கொண்டனர். இந்த யுத்த நிறுத்தம் போலியானதொன்றாகும் என்றும் அவர் கூறினார். அத்துடன் வடக்கு கிழக்கு பகுதியில் பல யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அவைபெரும்பாலும் இராணுவ முகாம்கள் அருகில்

**யுத்தநிறுத்தம்**

அந்த பொருள்களை வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வெல்லாவெளி எனும் இடத்தில் க. அருள் நேசராசா, கா. கனகரத்தினம், கேசவப்போடி வெள்ளைத்தம்பி, சாமித்தம்பி கந்தப்போடி, தவசிப்பிள்ளை இராசையா, திருமதி வேலாப்போடி, முந்தாப்போடி கந்தப்போடி, பெரியதம்பி ஆகியோரின் வீடுகளே உடைக்கப்பட்டு சூறையாடப்பட்டுள்ளன. இந்த வீடுகளின் சொந்தக்காரர்கள் தற்போது வீடுகளில் இல்லாத நிலையில் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

**ஆனையிறவில்**

சேர்ந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் காவலரணை நோக்கி இரு தடவைகள் கனோன் தாக்குதலை மேற்கொண்ட போதிலும் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த ஒழுங்குகளைச் சரிவரக் கடைப்பிடித்ததால் எவ்வித எதிர்த் தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரியவருகிறது.

**பலாலியில்**

லங்கா இராணுவத்தினரில் சிலர் புலிகளால் ஏற்கனவே புதைத்து வைத்த மிதிவெடிகளில் சிக்கி தமது கால்களை இழந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு தமது முகாமிற்குத் திரும்பிச்சென்றனர். (மு)

**ஆற்றைக்**

எனும் இடத்திலேயே இடம்பெற்றது. அம்பிலாந்துறை என்னும் இடத்திலிருந்து கிரான்குளம் எனும் இடத்திற்குப் படகு மூலம் செல்வதற்காக துறைக்குச் சென்றுகொண்டிருந்த ஒரு பொதுமகனுக்கே இந்த அனுபவம் நேர்ந்துள்ளது.

வெளியுறவுத் துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் நாளை ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் பேச்சுவார்த்தையே ஈராக்கிற்கு வழங்கப்படவிருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் என எச்சரித்துள்ளார்.

## ஆங்கிலப் பரீட்சை

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் உயர் தொழில் ஆங்கில கற்கை நெறிக்கான பரீட்சைகள் இம்மாதம் பன்னிரெண்டாம், பதின்மூன்றாம் திகதிகளில் நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணத்தில் கற்கை நெறியினை மேற்கொண்டிருக்கும் மாணவர்களுக்கான பரீட்சைகள் யாழ். பிராந்திய நிலையத்திலேயே நடைபெறவுள்ளன. (20)

போர்

தாக இந்தச் சந்திப்பு இருக்கும் என்பதாலேயே தாம் இந்தக் கூட்டத்தினைக் கூட்ட விரும்பியதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை சிறிலங்காவின் இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா கருத்துத் தெரிவிக்கையில் போர் நிறுத்தம் கடைப்பிடிக்கும் விதம் குறித்து அவதானிக்கப்பட்டு வருகிறது என்றும், இது தொடர்பாக தீர்வு ஒன்று எடுக்கப்படும் வரை போர் நிறுத்தத்தை கண்காணிப்பது என்பது பற்றி முடிவு எடுக்க இயலாது என்றும் தெரிவித்தார்.

ஆசிரியர்

நடந்தால் சங்கம் வெறுமனே பார்த்துக் கொண்டிராது என்றும் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

அண்மையில் யாழ் கல்விப் பணிப்பாளர் இந்தத்தவணையில் ஆசிரியர்கள் லீவில் நின்றால் சம்பளமற்ற லீவாகக் கணிக்கப்படும் எனப் பத்திரிகை மூலமாக வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்தே மேற்கண்டவாறு பொதுச் செயலாளரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகப்பேற்று லீவு, வைத்திய லீவு, மரணவீடு தொடர்பான லீவு போன்ற அத்தியாவசிய தேவைகள் காரணமாக லீவில் நிற்கும் ஆசிரியர்கள் இது தொடர்பாக எம்மிடம் முறையீடு செய்துள்ளார்கள் என்றும் இவ்வாறாக அத்தியாவசிய தேவைகள் தொடர்பான லீவைச் சம்பளமற்ற லீவாக அதிகாரிகளால் அல்லது அதிபர்களால் கணிக்கப்பட்டால் அது தொடர்பாகச் சங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரும்படியும் பொதுச் செயலாளர் கோரியுள்ளார்.

## வளைகுடாப் போருக்கு எதிர்ப்பு

(லண்டன்)

வளைகுடாவில் போர் ஒன்றை நடத்துவதற்கு பிரிட்டனில் எதிர்ப்புகள் தோன்றியுள்ளன. ஆரம்பத்தில் வளைகுடாவில் பிரிட்டனின் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து வந்த தொழிற் கட்சியினர் தற்பொழுது எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். ஈராக்கிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடை அதன் பலனைத்தர வழங்கப்பட்ட கால அவகாசம் போதாது என்றும், கால அவகாசத்தை நீடித்துப் போரைப் பின்போடுமாறும் தொழில் கட்சியின் நிழல் அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தொழில் கட்சியின் இக்கோரிக்கைக்கு கன்சவேட்டிவ் கட்சியைச் சேர்ந்த சிலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். தொழில் கட்சியினர் போருக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க இவ் வாரத்தில் லண்டனில் பேரணி ஒன்றையும் நடத்தவுள்ளனர்.

## இராணுவம் கைது செய்தவரை காணவில்லை

(நமது நிருபர்)

கொழும்பிற்குச் சென்ற இளம் குடும்பஸ்தர் (கந்தையா பாலச்சந்திரன் 29) திரும்பி வரும் வழியில் வவுனியாவில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டதாகவும், தற்பொழுது அவர் பற்றிய தகவல் ஏதும் இல்லை எனவும் தெரியவருகின்றது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் பதின்மூன்றாம் திகதி கொழும்பு சென்ற இவர் செப்டம்பர் மாதம் பத்தாம் திகதி திரும்பி வரும் வழியில் வவுனியாவில் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

இது பற்றிய தகவல் அறிந்த குடும்பத்தினர் தேடும் முயற்சியில் பல முறை வவுனியா சென்று முயற்சித்த போதும் பலன் எதுவும் கிட்டவில்லை. கைது செய்யப்பட்டவர் இருபிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அகதிகள்

இந்தியா நோக்கிப் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த சமயம் சிறிலங்கா கடற்படையினர் இவர்களின் படகை நோக்கிப் பீரங்கித் தாக்குதல் மேற்கொண்ட போது இரு படகு ஓட்டிகளும் கடலில் பாய்ந்துள்ளனர். படகில் இருந்த மிகுதி ஆறு பேருமாகிய வி. இன்ராசா விமலா தேவி (வயது 38), வி. சுதாசமீகர் (வயது 17), வி. சசிகரன் (வயது 13), வி. தேவராசா (வயது 9), வி. கிரிதரன் (வயது 6), வி. மதிகரன் (வயது 3) ஆகியோரைக் கடற்படையினர் படகுடன் சேர்த்து இழுத்துச் சென்றுள்ளனர்.

கடலில் பாய்ந்த இரு படகோட்டிகளில் ஒருவர் நீந்திக் கரை சேர்ந்துள்ளார். மற்றவருக்கு என்ன கதி நேர்ந்தது என்பது பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை. ராவெளிச்சத்தின் மத்தியில் பல தடவை பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னரே இவர்கள் கைது செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது.

கைது செய்யப்பட்டவர்களை மீட்டுத்தரும்படி இவர்களின் சகோதரர் ஒருவர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் முறையிட்டுள்ளார். (க)

கொழும்பில்

பட்டுள்ள பதினைந்து இளைஞர்களும் புலனாய்வுத்துறையினரின் தீவிரவிசாரணைக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

சமாதானம்

இந்தியாவை மத்தியஸ்தம் வகிக்க அழைத்தால் அல்லது பேச்சுவார்த்தைக்காக தொடர்புகொண்டால் சகல வழிகளிலும் உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

சிறிலங்காவிற்கு

இலங்கையில் நிலவும் நிலைமைகள் குறித்து அந்தக் கூட்டத்தில் விவாதிக்கப் பட்டது என்றும், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒருதலைப் பட்சமான யுத்த நிறுத்தத்தை அந்தப் பொதுக்குழு வரவேற்றதாகவும் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் இலங்கையில் வடக்கு, கிழக்கில் நிலையான அமைதி ஏற்பட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் முழுமையான அமைதி ஏற்பட்டதன் பிறகுதான் தமிழ் அகதிகள் அனுப்பப்படுவது குறித்து பரிசீலனை செய்யப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை தமிழகத்தில் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டிருக்கும் அகதிகளும் தாயகம் திரும்ப விரும்பினால் மத்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசனை நடத்தி விட்டு அனுப்பப்படுவார்கள் என்றும் அவர்கள் திரும்பிச் செல்ல தமது அரசாங்கம் கட்டாயப் படுத்த மாட்டாது என்றும் அவர் தெரிவித்தார்.

மாவிட்டபுரத்தில்

நேற்று நண்பகல் 12 மணியளவில் புலிகளின் காவலரண் ஒன்றின்மீது நடாத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் தும்பன், சுகில் ஆகிய இரு போராளிகள் காயமடைந்துள்ளனர். (க)

தமிழரின்

தமது பாதுகாப்புக்காக ஒரு தனி இராணுவம் அமைத்துக் கொள்வது என்பதும் ஏற்றுக் கொள்ள முடியாது மாகாண சபை திட்டத்தின் கீழோ அல்லது பிரதேசசுயாட்சி அமைப்பின் கீழோ தான் நாம் பேச்சுக்களை நடாத்த தயாராகவுள்ளோம் என்றார்.

மேலும் கடந்த முதலாம் திகதியில் இருந்து விடுதலைப் புலிகளால் தன்னிச்சையாக செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த விடயம் பற்றி அவர் குறிப்பிடுகையில் இந்த யுத்த நிறுத்தம் சர்வதேச ரீதியாக புலிகள் தமக்கு ஆதரவு தேடிக்கொள்வதற்கும், ஆட்களைத் திரட்டுவதற்கும் செய்து கொண்டனர். இந்த யுத்த நிறுத்தம் போலியானதொன்றாகும் என்றும் அவர் கூறினார். அத்துடன் வடக்கு கிழக்கு பகுதியில் பல யுத்த நிறுத்த மீறல்கள் இடம்பெற்றுள்ளன. அவை பெரும்பாலும் இராணுவ முகாம்கள் அருகில் பதுங்குகுழிகளை பலப்படுத்தல் உட்பட பல்வேறுபட்ட விடயங்கள் உட்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். இருந்தும் 10ஆம் திகதிவரை போர் ஓய்வை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும், எதிர் வரும் வியாழக்கிழமை நடைபெறவிருக்கும் கட்சித் தலைவர்கள் மாநாட்டில் தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

னை. இந்த வீடுகளில் சொந்தக்காரர்கள் தற்போது வீடுகளில் இல்லாத நிலையில் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

ஆனையிறவில்

சேர்ந்த இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் காவலரணை நோக்கி இரு தடவைகள் கனோன் தாக்குதலை மேற்கொண்ட போதிலும் விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த ஒழுங்குகளைச் சரிவரக் கடைப்பிடித்ததால் எவ்வித எதிர்த் தாக்குதலையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரியவருகிறது.

பலாலியில்

லங்கா இராணுவத்தினரில் சிலர் புலிகளால் ஏற்கனவே புதைத்து வைத்த மிதிவெடிகளில் சிக்கி தமது கால்களை இழந்துள்ளனர். இதனைத் தொடர்ந்து இராணுவத்தினர் காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு தமது முகாமிற்குத் திரும்பிச்சென்றனர். (மு)

ஆற்றைக்

எனும் இடத்திலேயே இடம் பெற்றது. அம்பிலாந்துறை என்னும் இடத்திலிருந்து கிரான் குளம் எனும் இடத்திற்குப் படகு மூலம் செல்வதற்காக துறைக்குச் சென்று கொண்டிருந்த ஒரு பொதுமகனுக்கே இந்த அனுபவம் நேர்ந்துள்ளது.

மாடு மேய்த்த

ந்த இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறி வந்த சமயம் அப்பகுதியில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த 35ஆம் கிராமத்தைச் சேர்ந்த யோகநாதன் (35 வயது) என்பவரைக் கண்டதும் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர். இதனால் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி கருணாதேவி துரைசிங்கம்

உடுப்பிட்டியைச் சேர்ந்த திருமதி கருணாதேவி துரைசிங்கம் 7-01-1991 திங்கட்கிழமை காலமானார். இவர் R.S. துரைசிங்கத்தின் (தொழில்நுட்ப உதவியாளர், நீர்ப்பாசன இலாகா, யாழ்ப்பாணம்) மனைவியும், நோவாவின் தாயாரும், காலஞ்சென்ற S.றொபேட்நவரட்ணம் (முன்னாள் அதிபர் உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), அன்னம்மா அவர்களின் கனிஷ்ட புதல்வியும், திரு N சத்தியமூர்த்தி (ஆசிரியர், காரைநகர் இந்துக் கல்லூரி), திருமதி சத்தியதேவி சபாநாதன், திருமதி சாந்ததேவி நல்லையா, திரு. தியாகமூர்த்தி ஆகியோரின் சகோதரியும், திருமதி பகவதி சத்தியமூர்த்தி, திரு J.T சபாநாதன், திரு S.S. நல்லையா, திருமதி நவினி தியாகமூர்த்தி, திருமதி சித்திரா தம்பாப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், திரு S.S.T. துரைசிங்கம், காலம்சென்ற திருமதி கிரோன் துரைசிங்கம் ஆகியோரின் மருமகளுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-01-1991 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

'செல்லவில்லா'
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
R.S துரைசிங்கம்
(R/1016)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆ இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.